දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி )0112698507 , 0112694033
Telephone )0112675449 ,0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපැල ) 
மின்னஞ்சல் முகவரி
e-mail ) postmaster@health.gov.lk

වෙබ් අඩවිය )
இணையத்தளம்
website ) www.health.gov.lk

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය )
எனது இல )
My No. )CF/EXW/07/2022

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி )2022/10/....06
Date )

# සෞඛ්‍ය අමාත්‍යාංශය
# சுகாதார அமைச்சு
# Ministry of Health

பொதுச் சுற்றுநிருப இலக்கம் : 02-85 /2022

மாகாண சுகாதார செயலாளர்கள்,

பிரதிப் பணிப்பாளர் நாயகம் - இலங்கை தேசிய வைத்தியசாலை, கொழும்பு

பணிப்பாளர் தேசிய வைத்திய சாலை கண்டி

மத்திய அமைச்சின் கீழ் வரும் சகல வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்.

மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்,

பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்,

உரிய நிறுவனங்களின் தலைவர்கள் அனைவருக்கும்,

அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையில் III ஆம் தரத்திலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2022 (இரண்டாம் தடவை)

அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையில் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 03 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் சித்தியடைய வேண்டிய வினைத்திறன் தடைப்பரீட்சை சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில நடைபெறும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது மற்றும் பரீட்சை நடைபெறும் நிலையம், திகதி மற்றும் நேரம் என்பன பரீட்சை அனுமதி அட்டையில் குறித்து அனுப்பிவைக்கப்படும்.

02. தகைமைகள் :-

அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையில் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்பட்டு இதுவரை இப் பரீட்சையை பூர்த்தி செய்திராத உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

கவனிக்கவும் : **விண்ணப்பம் கிடைக்கப்பெறும் கடைசி தினமான 2022.11.14 திகதியுடன் III ம் வகுப்பிற்கு நியமிக்கப்பட்டு உரிய நியமனக்கடிதம் கிடைக்கப்பெற்றுள்ள உத்தியோகத்தர்களது விண்ணப்பங்களை மாத்திரம் எனக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கவும்.**

குறிப்பு (i) பழைய சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் வினைத்திறமை காண் தடைப்பரீட்சைக்கு தோற்றி அப்பரீட்சையில் ஒரு பகுதி மாத்திரம் தேர்ச்சியடைந்து உள்ளீர்ப்பு செய்யப்பட்ட அலுவலர்கள் பொது சுகாதார முகாமைத்துவ உதவியாளர்கள் சேவையின் தரம் III இற்கு குறித்துரைக்கப்பட்ட வினைத்திறன் காண் தடைப்பரீட்சையில் தொடர்புடைய பாடங்களில் தேர்ச்சி பெற வேண்டும். இந்த அலுவலர்களுக்கு இந்த சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் "சுகாதார நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலை நிர்வாகம்" எனும் பாடத்திலிருந்து விதிவிலக்களிக்கப்படும்

(ii) முன்னைய ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு அமைவாக தரம் III வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையின் எந்தவொரு விடயத்திற்கும் தோற்றாது / உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III ற்கு ஏற்புடைய சகல விடயங்களிலும் சித்தியடைய வேண்டும்.

தோற்றும் மொழி

அலுவலர் தான் குறித்த சேவையில் இணைவதற்காகப் பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலத்தின் அல்லது அரச கரும மொழியொன்றில் மூன்று வினாப்பத்திரங்களுக்கும் விடையளித்தல் வேண்டும். அலுவலர்கள் தமது விருப்பத்தின் அடிப்படையில் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியே ஒன்றுக்கொன்று வெவ்வேறான தடவைகளில் தோற்ற முடியும்.

எவ்வாறாயினும், சித்தியடைவதற்கு அலுவலர்கள் ஒவ்வொரு பாடத்திற்குமான மொத்தப்புள்ளிகளில் ஆகக் குறைந்தது நாற்பது (40%) வீதத்தினைப் பெறுதல் வேண்டும்.

தேசிய தொழில்பயிலுநர், தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற கணினி இயக்கப் பிரயோக அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள அலுவலர்களும், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணினி தொடர்பான பட்டம் பெற்றுள்ள அலுவலர்களும், மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவின் அனுமதிபெற்ற தொழிற் பயிற்சி நிறுவனம் ஒன்றில் NVQ மட்டம் 4 அல்லது அதனைவிட உயர் மட்டத்தில் தேர்ச்சி பெற்றுள்ள அலுவலர்களும் மேற்குறித்த கணினிப் பரீட்சையிலிருந்து விடுவிக்கப்படுவர்.

**இடைக்கால ஏற்பாடுகள்:**

1. **தரம் III ற்குரிய வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை**

(i) அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பு அமுலுக்கு வர முன்னர் 1840/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 2013.04.02 ஆம் திகதி முதல் அமுலிலிருக்கும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பில் தரம் III இலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையினைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் தரம் III இலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதாகக் கருதப்படுவதுடன், மேற்படி அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் தரம் III இலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையை பூர்த்தி செய்யாத, எனினும் மேற்படி பரீட்சையில் (1) அலுவலக முறைமை (2) நிதி முறைமை (3) கணினிப் பரீட்சை ஆகிய பாடங்களில் ஒன்று அல்லது சிலவற்றில் சித்தியடைந்த அல்லது விதிவிலக்கப்பட்ட உத்தியோகத்தர்கள், வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் குறித்த பாடங்களில் பாடத்திலிருந்து பாடத்திற்கு எனும் அடிப்படையில் விலக்களிக்கப்படுவர்.

(ii) அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரமுன்னர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அலுவலர்கள், தரம் III இற்கு நியமனம் செய்யப்பட்டு 06 தடவைகள் (அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் கீழ் பெற்றுக் கொண்ட வாய்ப்புக்கள் உள்ளடங்களாக) பூர்த்தியாவதற்குள் தரம் III இற்குரிய வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

03. **விண்ணப்பங்கள் :-**

இச் சுற்று நிருபத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக விண்ணப்பதாரிகளினால் தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் தங்களினுடைய திணைக்களத் தலைவரின் ஊடாக 'பணிப்பாளர் (பரீட்சைகள்), சுகாதார அமைச்சு, "சுவசிரிபாய", இலக்கம் - 385, வண.பத்தேகம விமலவங்சதேரர் மாவத்தை, கொழும்பு- 10' என்னும் முகவரிக்கு **2022.11.14** ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயரை **"அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையில் III ஆம் தரத்திலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை – 2022 (இரண்டாம் தடவை)"** என குறிப்பிடுதல் வேண்டும். **இவ்வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் என்பதை தனிநபர் கோவைகளை பேணும் உத்தியோகத்தரும், விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள அனைத் தகவல்களும் சரியானவை என்பதை நிறுவன தலைவரும் சான்றுப்படுத்துதல் கட்டாயமாகும்.** தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முகவரியிடப்பட்ட ரூபா.110 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட (9"× 4") அளவுடைய கடித உறை 1 இணையும் (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ, அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பிவைக்க வேண்டும். **விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் சரியாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள், உரியமாதிரிப் படிவத்திற்கு ஏற்ப அமையாத விண்ணப்பங்களும் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிப்படும்.**

குறிப்பு : விண்ணப்பமானது A4 தாளின் இருபக்கங்களினையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும். முதலாவது பக்கத்தில் 01 – 04 வரையான விபரங்களும், இரண்டாவது பக்கத்தில் 05 – 09 வரையான விபரங்களும் உள்ளக்கப்பட்டிருக்க கூடிய வாறும் இருத்தல் வேண்டும். மேற்படி மாதிரிக்கு ஒவ்வாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

04. பரீட்சைக் கட்டணம்

4.1 முதன் முறையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கட்டணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு விடயத்திற்கும் ரூபா.25 வீதம் இரத்துச் செய்யப்படாத முத்திரையினை ஒட்டி அதன் மீது தமது கையொப்பத்தினை இட்டு இரத்துச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

4.2 எக் காரணத்தினைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது வேறு பரீட்சைகளின் பொருட்டு மாற்றப்படுதலோ, அல்லது மீளப் பெறுதலோ மேற்கொள்ள இடமளிக்கப்படமாட்டாது.

05. பரீட்சையின் பொருட்டு உட்படுத்திக் கொள்ளுதல்

5.1 ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். அப் பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை குழுவின் தலைவரிடம் கையளிக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லையாயின் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

5.2 பரீட்சையின் பொருட்டு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளின் பொருட்டு பரீட்சைக் குழுவின் தலைவருக்கு தங்களினது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுவதன் பொருட்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை கொண்டு வருதல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை

(ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை

(இ) வலுவுள்ள சாரதி அனுமதிப்பத்திரம்

(ஈ) வலுவுள்ள கடவுச் சீட்டு

06. பரீட்சை பாடத்திட்டம்

இவ் வினைத்திறமைக்காண் தடைதாண்டல் பரீட்சையானது அலுவலக முறைமையும் தாபன விதிக்கோவை மற்றும் கணக்கீட்டு முறைமை, கணினிப் பரீட்சை, சுகாதார நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலைகளின் நிருவாகம் எனும் நான்கு வினாப்பத்திரங்களைக் கொண்டமைந்துள்ளது. ஒவ்வொரு பகுதிகளுக்கும் 100 புள்ளிகள் வீதம் வழங்கப்படுவதுடன். சித்தியடைவதன் பொருட்டு ஆகக் குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அலுவலர் தமது விருப்பத்தின் அடிப்படையில் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியே ஒன்றுக்கொன்று வெவ்வேறான தடவைகளில் தோற்றி பரீட்சையை பூரணப்படுத்திக்கொள்ள முடியும். முதலாம் தடவை பரீட்சைக்கு தோற்றுபவர்கள் அனைத்து விடயங்களுக்கும் விண்ணப்பிக்க வேண்டும்.

07. விடயப்பரப்பு

**1 வினைத்திறமைக்காண் தடைதாண்டல் பரீட்சை**

**7:1 அலுவலக முறைமையும் தாபனவிதிக்கோவையும்**

இவ் வினாத்தாள் தாபன விதிக்கோவையின் கீழ் காணும் அத்தியாயங்களின் படி அமையப்பெற்றது. நேரம் 02 மணித்தியாலங்களைக் கொண்ட பல்தேர்வு கட்டுரை வினாக்கள் 08 ஐ கொண்டமைந்துள்ளதுடன் அதில் ஏதேனும் 05 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும். மொத்தப் புள்ளிகள் 100.

❖ **தாபனவிதிக் கோவையின் கீழ் வரும் அத்தியாயங்களின் படி**

1. ஒரு அலுவலகத்தின் செயற்பணி
2. ஒரு அலுவலகத்தை திட்டமிடல்
3. ஆவண முகாமைத்துவம்
4. ஆவணங்களைக் கோப்பிலிடல் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட பணிகள்
5. பதவியணி முகாமைத்துவம்
6. பொதுசன தொடர்பும் முகாமைத்துவமும்

❖ அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அலுவலக நடைமுறை விதிகளின் அத்தியாயங்கள்

1. III,IV,V,VI மற்றும் VII அத்தியாயங்கள்: ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறையும், நியமனம் செய்வதும்.
2. XVIII ஆம் அத்தியாயம்: இடமாற்றம் செய்தல்
3. VIII ஆம் அத்தியாயம்: தகுதிகாண் காலம், பதில்
4. XVI அத்தியாயம் : சேவையை நீடித்தல் மற்றும் ஓய்வுறுத்தல்

❖ தாபன விதிக்கோவை அத்தியாயங்கள்

1. VII ஆம் அத்தியாயம் - சம்பளம்
2. XII ஆம் அத்தியாயம் - விடுமுறை
3. XXVII ஆம் அத்தியாயம் - கடிதத் தொடர்புகளை மேற்கொள்ளும் முறை
4. XXVIII ஆம் அத்தியாயம் - நிருவாக நடவடிக்கை முறை
5. XXXII ஆம் அத்தியாயம் - அரசியல் உரிமைகளை அனுபவித்தல்

**7:2 கணக்கீட்டு முறைமை வினாத்தாள்**

இவ்வினாத்தாள் நேரம் 02 மணித்தியாலங்களைக் கொண்ட பல்தேர்வு கட்டுரை வினாக்கள் 08 ஐ கொண்டமைந்துள்ளதுடன் அதில் ஏதேனும் 05 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும். மொத்தப் புள்ளிகள் 100.

❖ நிதிப்பிரமாணத்தின் கீழ் வரும் அத்தியாயங்களின் படி

1. நி.பி. I ஆம் அத்தியாயம் - செலவினம் மற்றும் வருமான மதிப்பீடு
2. நி.பி. II ஆம் அத்தியாயம் - செலவினத்தை மீளச் செலுத்துதல், பதிவழிப்புச் செய்வதற்கான தத்துவம்
3. நி.பி. III ஆம் அத்தியாயம் - நிதி முகாமைத்துவமும் வகைப்பொறுப்புத் தன்மை
4. நி.பி. IV ஆம் அத்தியாயம் - பெறுகை
5. நி.பி. VI ஆம் அத்தியாயம் - அரசாங்கப் பணம் முதலியவற்றின் கட்டுக்காப்பும் கட்டுநிதிகளும் வங்கிக் கணக்குகளும்

**7:3 கணனிப் பரீட்சை வினாத்தாள்**

இவ்வினாத்தாள் நேரம் 01½ மணித்தியாலங்களைக் கொண்ட பல்தேர்வு கட்டுரை வினாக்கள் 08 ஐ கொண்டமைந்துள்ளதுடன் அதில் ஏதேனும் 05 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும். மொத்தப் புள்ளிகள் 100.

**கணனிப் பரீட்சை கீழ் வரும் அத்தியாயங்களின் படி**

i. தகவல் தொழில்நுட்பம் பற்றிய அடிப்படை எண்ணக்கருக்கள்
ii. விண்டோஸ் தொழிற்பாட்டு முறை
iii. கோப்பு முகாமை
iv. சொல் உள்ளீடு :

அடிப்படைத் தேர்ச்சிகள், திரை பற்றிய பரீட்சயம், வசனங்களில் திருத்தங்கள் செய்தல், வசன அமைவிடம், எழுத்துரு மற்றும் பண்புகள், பந்தியமைப்பு, வரிகளுக்கிடையிலான இடைவெளிகளை மாற்றுதல், பாய்ப்புள்ளி அமைப்பு, வாசகங்களைத் தேடுதலும் மாற்றீடு செய்தலும் எழுத்துப் பிழை மற்றும் இலக்கணம், ஒத்தகருத்துச் சொற்கள், நிரல்களைப் பயன்படுத்துதல், பக்க அமைப்பு, ஆவணங்களை அச்சிடுதல், அட்டவணைகளை உருவாக்குதல், வாசகங்களை வகைப்படுத்துதல், கோவை முகாமை, அஞ்சல்களை பல முகவரிக்கு அனுப்புதல், மக்ரோ பயன்பாடு.

v. விரிதாள் :

அடிப்படைத் திறமைகள், வடிவமைத்தல் (Formatting), தொகுத்தல், நிரல்களும் வீச்சும், செருகுதலும் நீக்குதலும், தரவுகளை வகைப்படுத்தலும், வரைபுகளை உருவாக்குதல், அச்சிடுதல், தொழிற்பாடு, மக்ரோக்களின் பயன்பாடு, கோவை முகாமை.

vi. இணையம் :

இணையம் பற்றிய அறிமுகம், அடிப்படைத் தேர்ச்சிகள், மின்னஞ்சல்களைப் பெற்றுக் கொள்ளல், மின்னஞ்சல்களை அனுப்புதல், அவற்றுக்குப் பதிலளித்தல், இணைப்புக்களைப் பயன்படுத்துதல், முகவரிகளை இனங்காண்பதற்கு சுருக்கப் பெயர்களைப் பயன்படுத்துதல், தகவல் தயாரித்தல்.

**7:4 சுகாதார நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலை நிருவாகம்**

இவ்வினாத்தாள் நேரம் 02 மணித்தியாலங்களைக் கொண்ட பல்தேர்வு கட்டுரை வினாக்கள் 08 ஐ கொண்டமைந்துள்ளதுடன் அதில் ஏதேனும் 05 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும். மொத்தப் புள்ளிகள் 100.

**சுகாதார நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலை நிருவாகத்தின் கீழ் வரும் அத்தியாயங்களின் படி**

1. சுகாதார மற்றும் ஆயர்வேத திணைக்களத்தின் நோக்கங்கள்
2. நேர்வரிசை அமைச்சின் மற்றும் மாகாண சபைகளின் சுகாதார சேவைகள் கட்டமைப்பு
3. சுகாதார துறையின் அடிப்படை அம்சங்களும் அது சம்பந்தமான நிறுவனங்களும்
4. வைத்தியசாலையின் செயற்பாடு
5. சமைக்காத உணவுகளுக்கு கட்டளையிடல், கையேற்றல், சமைத்த உணவுகளின் தரம் பற்றிய பரிசோதனை
6. மருத்துவ புள்ளிவிபர முகாமைத்துவம்
7. மருத்துவ நிறுவனங்களின் தொடர்பாடல் செயற்பணி மற்றும் பொதுசன தொடர்பு
8. வைத்தியசாலைக் கட்டணம் மற்றும் தோட்ட உற்பத்தித்திறன் பற்றிய அறிவை அளவிடுவதற்கான வினாத்தாளைக் கொண்டதாகும்.

08. **பரீட்சை தொடர்பான ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல்**

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடைசெய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவா் உதவிசெய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09. இச்சுற்றறிக்கையில் உள்ள விடயங்களை உமது நிறுவனத்தில் கடமையாற்றும் அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையில் III ஆம் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு அறியத் தரவும். (இந்த விபரங்களை www.health.gov.lk எனும் இணைய முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளமுடியும்.)

**கவனிக்கவும் : சிங்களம், தமிழ், ஆங்கில மொழி மூல சுற்றுநிறுபங்களுக்கிடையே ஏதாவது ஓவ்வாமைகள் காணப்படுமாயின் சிங்கள மொழி மூல சுற்றுநிருபமே வலுவுடையதாகும்.**

Chemy

ஷாமிக எச். கமகசே
பிரதிப் பணிப்பளர் நாயகம் (நிர்வாகம்)II
செயலாளருக்காக
காதாரம் அமைச்சின்.

Chamika H. Gamage
Deputy Director General (Administration) II
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10.

EXW

மாதிரி விண்ணப்பப் படிவம்

| அலுவலக உபயோகத்தின் பொருட்டு |
|---|

அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையில் III ஆம் தரத்திலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2022 (இரண்டாவது தடவை)

01. (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் ( தமிழில்) : ..........................................................

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர்( ஆங்கில கப்பிற்றல் எழுத்தில்) :

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதல் எழுத்துக்களுடன் பெயர் : (தமிழில்): ..........................................................

..........................................................

(iv) முதல் எழுத்துக்களுடன் பெயர் : (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) i. முதல் நியமனத் திகதியும் : ..........................................................

ii. கடித இலக்கமும் : ..........................................................

iii. தற்பொழுது பெறும் வருடாந்த சம்பளம்: ..........................................................

iv. தொலைபேசி இலக்கம்: | | | | | | | | | | |

v தேசிய அடையாள அட்டை இலக்கம்: | | | | | | | | | | | | |

vi. மின்னஞ்சல் முகவரி :..........................................................

02. நீங்கள் இம்முறை தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் விடயங்களுக்கு முன்னாள் உள்ள கூண்டினுள் (✓) அடையாளத்தை இடவும். தோற்றாவிடின் (✕) குறியை இடவும்.

| | | | |
|---|---|---|---|
| அலுவலக முறைமை மற்றும் தாபன விதிக்கோவை | ☐ | சுகாதார நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலை நிருவாகம | ☐ |
| கணக்கியல் | ☐ | கணினிப் பரீட்சை | ☐ |

03. (அ) தற்போது சேவை புரியும் நிறுவனம் (தமிழில்) ..........................................................

(ஆங்கிலத்தில்) ..........................................................

(ஆ) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது மத்திய அரசினால் ☐

மாகாண சபையினால் ☐

(இ) அதற்குரிய மாவட்டம் :..........................................................

(ஈ) மாகாண சபையாயின் உரிய மாகாணம்..........................................................

(உ) பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதன் பொருட்டு தெளிவாக விண்ணப்பதாரியினது முகவரியிடப்பட்ட "9×4" அளவு ரூபா.110.00 பெறுமதியுடைய முத்திரை இடப்பட்ட கடித உறை ஒன்று இணைக்கப்பட்டுள்ளதா?..........................................................

(ஊ) (i) தபால் முகவரி (சிங்களத்தில்) : ..........................................................

(ii) தபால் முகவரி (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்) : ..........................................................

04. பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்): ..........................................................

05. (அ) இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா? ..........................................................................

(ஆ) அவ்வாறு தோற்றியிருந்தால் இந்த தடவை முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா? ...........................................

முத்திரைக் கூண்டு

06 **விண்ணப்பதாரியின் சான்றிதழ்**

(i) எனது அறிவிற்கும், விசுவாசத்தின் அடிப்படையிலும் இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவைகளெனவும், இப் பரீட்சைக்கு நான் தோற்றுவது முதன்முறையானபடியால் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியமில்லை எனவும் / முதன் முறை அல்லாதபடியால் ரூபா ........................ பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளதெனவும், இவ்விண்ணப்பத்தில் என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் மதிப்பு நீக்கம் செய்வதற்கு முன்பு வலுவிலுள்ள பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

(ii) சுகாதாரத் திணைக்களத்தினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு உடந்தையாக நடப்பேன் எனவும், இப்பரீட்சை தொடர்பாக நியதிச் சட்டத்தின் படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எதுவிதத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுவேன் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி .................................... ....................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

---

07. **தனிநபர் கோவையினை கையாளும் விடய உத்தியோகத்தரின் சான்றிதழ்**

இவ் விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இப்பரீட்சையில் தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் விண்ணப்பதாரி கொண்டுள்ளார் என்றும், இவ்விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

......................................... ....................................................

பெயர் பெயரும் கையொப்பமும், திகதியும்.

---

08. **நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர் / திருமதி / செல்வி ...................................................... என்பவர் .............................. உத்தியோகத்தராக எனது நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரருக்கு தகுதி உள்ளதெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி .................................... ................................................

நிறுவனத் தலைவரின் கையொப்பம்

---

09. **பன்முகப்படுத்தப்பட்ட /விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர் / திருமதி / செல்வி ............................. என்பவர் **அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையில் III ஆம் தர** உத்தியோகத்தராக எனது நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரருக்கு தகுதி உள்ளதெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ....................................

................................................

பன்முகப்படுத்தப்பட்ட பகுதி /விசேட பிரிவு
தலைவரின் கையொப்பம்
இறப்பர் முத்திரை இடப்படவேண்டும்.